**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.251/2020 |
| Prosecution Witness | : | **அ.சா.3** |
| Name | : | **ராணி** |
| Father's/Husband Name: | : | நல்லமுத்து |
| Address : | : | ஊர்க்காவல்படை, பெரம்பலூர் மாவட்டம். |
| Age | : | 48/2021 |

**தேதி: 22/09/2021**

முதல் விசாரணை : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் தற்சமயம் பெரம்பலூர் மாவட்டம், ஊர்காவல் படையில் (APC) ஆக பணியாற்றி வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கின் எதிரி நல்லுசாமி என்பவரை எனக்கு தெரியும். இந்த வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும். அவர் போக்குவரத்து ஒழுங்கு பிரிவில் காவலராக பணியாற்றினார். 05/02/2014 அன்று மதியம் சுமார் 3.30 மணி அளவில் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கைகளை கவனிக்க நான், முனியமுத்து, உதவி ஆய்வாளர் சரவணன் மற்றும் ஜெயபால் ஆகியோர் பழைய பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தேன். அப்போது TN 46 B 2328 என்ற ஷேர் ஆட்டோ வாகனத்தை எதிரி செல்போன் பேசிக் கொண்டே ஒட்டி வந்தார். ஜெயபால் என்ற காவலர் வாகனத்தை நிறுத்தி

Copy

செல்போன் பேசிக் கொண்டு வாகனம் ஓட்டக் கூடாது எனவும், வாகனத்தை ஓரமாக நிறுத்தி பேச வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். ஆனால் நீ என்ன பெரிய ஆளா என கெட்ட வார்த்தையில் அசிங்கமாக திட்டினார். பின்பு வாகனத்தில் இருந்து இறங்கி வந்து சற்றும் எதிர்பாராமல் ஜெயபால் என்ற காவலரை கன்னத்தில் அடித்தார். பின்பு ஆட்டோவில் இருந்த இரும்பு கம்பியை எடுத்துவந்து இதை வைத்து அடித்து காலி பண்ணிவிடுவேன் என ஜெயபாலை மிரட்டினார். பின்பு நாங்கள் எதிரியை பெரம்பலூர் சட்ட ஒழுங்கு காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம். பின்னர் இது சம்மந்தமாக ஜெயபால் அவர் மீது நான் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக என்னை விசாரணை அதிகாரி விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை :**

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், குறுக்குவிசாரணை செய்ய முன்வராததால் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.